

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதி திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கான திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள் தலைவர்கள் ஒன்றிய நகர வட்டார பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் திருத்தணியில் நடைபெற்றது. இதில் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி வாக்கு சேகரித்து சிறப்புரை ஆற்றினார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, கூட்டணி கட்சி மாவட்ட தலைவர்கள் செயலாளர்கள் மு.பாபு, கோ.கிருஷ்ணமூர்த்தி, அஸ்வின், கே.கஜேந்திரன், கோபால், தளபதி சுந்தர், புருஷோத்தமன், தணிகைவேல், இரா.கார்த்திகேயன், ரஹமத்துல்லா, நூர்முகம்மது, கழக நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஓ.ஏ.நாகலிங்கம், இ.குருதாஸ், வடசென்னை ந.மனோகரன், ராஜாகுப்புசாமி, கே.திராவிடபக்தன், வி.சி.ஆர்.குமரன், உதயமலர்பாண்டியன், எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், ராஜேஷ்வரி ரவிந்திராநாத் திருத்தணி வி.வினோத்குமார், ப.ஆர்த்தி ரவி, ஜி.ரவிந்திரா, சி.என்.சண்முகன், சி.ஜெ.சீனிவாசன், பெ.பழனி, என்.கிருஷ்ணன், பி.டி.சந்திரன், கூளுர் எம்.ராஜேந்திரன், சி.சு.ரவிச்சந்திரன், க.ஹரிகிருஷ்ணன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், எம்.ஜெ.ஜோதிகுமார், டி.ஆர்.கே.பாபு, உள்பட பலர் உள்ளனர்.




சென்னை தெற்கு மாவட்ட வேளச்சேரி தொகுதி " வேளச்சேரி மேற்கு மற்றும் வேளச்சேரி கிழக்கு கழக அனைத்து நிலை நிர்வாகிகள் கூட்டம் நேற்று (24.3.2024) பகுதி கழக செயலாளர்கள் சு.சேகர், துரை.கபிலன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர்மா. சுப்பிரமணியன் கழக வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வில் தொகுதி பொறுப்பாளர் பழ. செல்வகுமார், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி மணிமாறன், மாவட்ட பொருளாளர் பாஸ்கரன், மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் மனோகரன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் பாலசுந்தரம், அடையார் பாஸ்கர், மாவட்ட அமைப்பாளர்கள் வே. ஆனந்தம், த.ரமேஷ், வழக்கறிஞர் ஜெகதீஸ்வரன், மாவட்ட துணை அமைப்பாளர் விநாயகமூர்த்தி (ம) பரிமேலழகன், அடையார் சுரேஷ், வட்ட கழக செயலாளர்கள் பொ.த. மதிவாணன் க. பாரதிதாசன் ஜி.பி.எஸ். பாலா சதீஷ் கே.என். தாமோதரன், பார்த்திபன், கோபி, எஸ். முருகவேல், வி. சக்திவேல், ம. தமிழரசு வி.எம்.டி. ராஜா ரமணன் பெ. ராஜி அ. பாண்டியன் க. கணேஷ்குமார் மு. தனசேகர் எஸ். ஜெயக்குமார் உள்ளிட்ட கழகத்தின் பங்கேற்றனர்.

### கொரடாச்சேரி பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில்

# இஸ்லாமிய மக்களை கவுரவித்து நோன்பு திறக்க ஏற்பாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் பாராட்டு!

திருவாரூர்,மார்ச் 25-

தஞ்சாவூர், நாகப்பட்டிணம் தொகுதிகளில் போட்டியிடும் இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் ச.முரசொலி (தி.மு.க.), வை.செல்வராஜ் (சி.பி.ஐ.) ஆகியோரை ஆதரித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற இஸ்லாமிய மக்களின் உணர்வுகளை மதிக்கும் விதமாக, பொதுக்கூட்ட மேடைக்கு அருகிலேயே இப்தார் நோன்பு திறக்கும் வகையில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெருந்தன்மைக்கு இஸ்லாமிய மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வை முன்னின்று நடத்திய மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் எம்.ஐ. தாஜுதீன் இஸ்லாமிய நிர்வாகிகள் நன்றி கூறியுள்ளனர்.

இந்தியாவே வியந்து பார்க்கும் அளவுக்கு நடைபெற்று வரும் தமிழ்நாடு முதல்வர் முக. ஸ்டாலின் அவர்கள், கூட்டணி கட்சிகளுடன் இணைந்து நடத்தி வரும் பாராளுமன்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங் கள் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி பெரும் எழுச்சியை ஏற்படுத்திவருகிறது.

இந்த நிலையில் கொரடாச்சேரியில் நடைபெற்ற தஞ்சை, நாகை நாடாளுமன்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றிருந்த நிலையில், மாலை 3 மணி முதற்கொண்டே பிரச்சார கூட்டம் நடைபெறும் கொரடாச்சேரியில் மக்கள் குவியத்தொடங்கினர்.

கூட்டத்தில் பங்கேற்க திருவாரூர், தஞ்சை, நாகைபகுதிகளில் இருந்து ஏராளமான இஸ்லாமியர்களும் வந்திருந்தனர்.

இந்த மாதம் இஸ்லாமியர்கள் ரமலானை முன்னிட்டு கடை பிடிக்கும் நோன்பு மாதம் என்பதை உணர்ந்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரச்சாரக் கூட்டம் மாலை 7 மணிக்கு துவங்கும் என்பதாலும், இப்தார் எனும் நோன்பு திறக்கும் நேரம் மாலை 6.30. என்பதாலும் கூட்டத்தில் பங்கேற்க வந்திருக்கும் இஸ்லாமிய மக்கள் நோன்பு திறக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய கேட்டுக் கொண்டதின் அடிப்படையில், பிரசாரக் கூட்டம் நடைபெறும் மேடைக்கு அருகி லேயே நோன்பு திறக்கும் வகையில் இஸ்லாமிய மக்கள் நோன்பு திறக்க பயன்படுத் தும் நோன்பு காஞ்சி, பேரீச்சை மற்றும் சிற்றுண்டி, தண்ணீர் என அனைத்து ஏற்பாடுகளையும் முதல்வர் மு.க.ஸ்டா லின் அவர்களின் வழிகாட்டுதல்களின் படி மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

திருவாரூர் மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் எம்.ஐ.தாஜுதீன் இந்த இப்தார் நிகழ்வை, கூத்தாநல்லூர் இளைஞர் அணி நிர்வாகி ராசன் பைசல் உள்ளிட்டவர்களுடன் இணைந்து ஒருங்கிணைத்து நடத்தினார்.

இஸ்லாமியர்களின் மத உணர்வுக்கு மதிப்பளித்து நடைபெற்ற இந்த நிகழ்வு , திராவிட மாடல் ஆட்சியில் மதவெறிய தூண்டும் பாசிச ஒன்றிய அரசின் கொள்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அனைத்து மதங்களையும் மதித்து அவர்களின் உணர்வுக்கும் கொள்கைக்கும் மதிப்பளிக்கும் உயரிய நடைமுறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது குறிப்பிடத்தக்கது.

### மார்க்சிஸ்ட் வேட்பாளர் சச்சிதானந்தத்தை ஆதரித்து

# ஒட்டன்சத்திரம் தொகுதியில் தீவிரப் பிரச்சாரம்!

## அமைச்சர்கள் இ.பெரியசாமி - அர.சக்கரபாணி கிராமம் கிராமமாக வாக்குச் சேகரித்தனர்!

திண்டுக்கல், மார்ச் 25-

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் சி.பி.எம். வேட்பாளர் சச்சிதானந்தத்தை ஆதரித்து அமைச்சர்கள் இ.பெரியசாமி, அர.சக்கரபாணி ஆகியோர் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்தனர்.

திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதி கழகத்தின் தலைமையிலான இந்தியா கூட்டணியில் சி.பி.எம். வேட்பாளர் சச்சிதானந்தம் போட்டியிடுகிறார். இவரை அறிமுகப்படுத்தியும், வாக்குகள் கேட்டும் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணிக்குழு சார்பில் பொதுக்கூட்டம் ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கழக துணைப் பொதுச் செயலாளரும், அமைச்சருமான இ.பெரியசாமி மேற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான அர.சக்கரபாணி ஆகியோர் தலைமை வகித்தனர். கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில்குமார் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:

தலைவர் கலைஞர் வழியில் நம் முதல்வர் பீடு நடை போட்டு வருகிறார். டெல்லியில் இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கும் வழி காட்டும் தலைவராக அவர் இருக்கிறார் என்பது தமிழக மக்களுக்கெல்லாம் பெருமை. கொடுத்த வாக்குறுதிகள் அத்தனையையும் நிறைவேற்றியவர். ஒன்றிய அரசால் நாம் மிகவும் வஞ்சிக்கப்பட்டுள்ளோம். கெட்ட பெயர் நமக்கு உருவாக்க நினைத்தார்கள். ஆனால் அவை அனைத்தும் தவிடுபொடியானது. ஒன்றிய அரசு தமிழகத்திடம் இருந்து பெரும் வரிவருவாய் இந்தியாவிலேயே நாம்தான் அதிகம் கொடுக்கின்றோம். ஆனால் ஒன்றிய அரசு நம்மை வஞ்சித்து தமிழ்நாட்டிற்கு கொடுக்கும் வரிவருவாய் மிகவும் குறைவு. இது எல்லாவற்றையும் நம் முதல்வர் திறம்பட சம்பாதித்து இந்தியாவில் முதன்மை முதல்வராக விளங்கி வருகிறார்.

அ.தி.மு.க. ஆட்சியில் விவசாயிகள் மிக மோசமான நிலைமையில் இருந்தனர். விவசாயிகள் பட்டினியால் அவதிப்பட்டனர். கழக அரசு பதவி ஏற்றவுடன் விவசாயிகள் கடன் தள்ளுபடி ரூ.12ஆயிரம் கோடியை கூட்டுறவுத்துறை மூலம் தள்ளுபடி செய்தவர். கழகத்தின் அரசு மக்களை என்றும் கைவிட்டதில்லை, மக்களும் நம்மை என்றும் கைவிட்டதில்லை. தமிழக மக்களின் இந்த ஆதரவு என்றும் நமக்கு இருக்கிறது. நூறு நாள் வேலைத்திட்டத்தை தேர்தல் வாக்குறுதியில் நம் முதல்வர் 150 நாள் வேலை தருவதாக உறுதி அளித்து இருக்கிறார்.

ஒட்டன்சத்திரத்தில் 96க்கு பின்பு அர.சக்கரபாணி சட்டமன்ற உறுப்பினர் ஆனதில் இருந்து ஒட்டன்சத்திரத்தில் வளர்ச்சி மிகஅபரிவிதமாக உள்ளது. எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்ற ப்பட்டுள்ளது. குறைகளே இல்லாத அளவிற்கு பணிகள் நடந்துள்ளது. பல லட்ச மரங்கள் நட்டது மிகப்பெரிய சாதனை. அடிப்படை பணிகள் நூறு சதவிகிதம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நாம் விவசாயிகள் மீது மிகுந்த அக்கறை கொண்டவர் நான் விவசாய குடும்பத்தை சேர்ந்தவன் என்பதில் எனக்கு மிகுந்த பெருமை. வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதியில் இந்தியாவிலேயே அதிக வாக்குகள் பெற்ற தொகுதியாக வரவேண்டும். அதற்காக நாம் கடுமையாக பாடுபட்டு வெற்றி பெற செய்ய வேண்டும் இவ்வாறு அமைச்சர் இ.பெரியசாமி பேசினார்.

அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது, திண்டுக்கல் மாவட்டத்தை நாம் கழகத்தின் கோட்டையாக உருவாக்கி இருக்கிறோம். 34 மாத கழக ஆட்சியில் செய்த சாதனைகள் ஏராளம். தமிழக முதல்வரின் சாதனையை பார்த்து இந்தியாவே உற்றுப் பார்க்கிறது. தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடைபெற்று வருகிறது. சொல்லாத வாக்குறுதிகள் அத்தனையையும் நம் முதல்வர் நிறைவேற்றி இருக்கிறார். பெண்களுக்கு செய்த திட்டங்கள் ஏராளம். உரிமைத்தொகை கிடைக்காத தகுதிவாய்ந்த தாய்மார்களுக்கு விரைவில் அத்தொகை கிடைக்க ஏற்பாடு செய்துள்ளேன். நூறு நாள் வேலை ஊதியமாக ரூபாய் நானூறாக உயர்த்தப்படும் என்ற வாக்குறுதியை முதல்வர் அறிவித்துள்ளார். பெட்ரோல் டீசல் விலை குறைக்கப்படும். ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு மட்டும் ரூபாய் ஆயிரம் கோடி குடிநீர் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டு இன்னும் ஆறு மாதங்களில் அது பயன்பாட்டிற்கு வரும். இதுமூலமாக வீடுதோறும் குடிநீர் இணைப்பு கிடைக்கும். ஏழு கலை கல்லூரிகள் பெற்ற மாவட்டமாக திண்டுக்கல் மாவட்டம் விளங்குகிறது. தமிழகத்தில் புதிதாக தொடங்கப்பட்ட 12 நகராட்சிகளில் தூய்மையான முதல் நகராட்சியாக ஒட்டன்சத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நியாயவிலைக்கடைகளில் தரமான அரிசி வழங்கப்படுகிறது. வருகின்ற தேர்தலில் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் வாக்குகள் நாம் கிடைக்க நாம் கடுமையாக பாடுபட வேண்டும். முக்கியமான மூன்று கோரிக்கைகளை மக்களிடத்தில் நாம் சேர்க்க வேண்டும். கூட்டணி கட்சி வேட்பாளராக போட்டியிடும் சி.பி.எம். சின்னமான அரிவாள், சுத்தியல், நட்சத்திரம், சின்னத்தை வீடுதோறும் கொண்டு போய் சேர்க்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

# சைதையில் வேட்பாளர் தமிழச்சி தங்கப்பாண்டியனை ஆதரித்து கூட்டம்!

சென்னை, மார்ச் 25 -

சைதை மேற்குப் பகுதி 139 அ வட்டக்கிளை நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம். 22.03.2024 மாலை. 7 மணியளவில் இடம்.47/137 மேற்கு ஜோன்ஸ் சாலை (ஆர். சுரேஷ் இல்ல மாடியில்) வட்ட அவைத் தலைவர் இ.வரதன். தலைமையிலும், வட்டக் கழகச் செயலாளர் சை.மு.சேகர் , வட்ட பாக ஒருங்கிணைப் பாளர்கள் வி.பி.ஜானகிராமன், எம். எஸ்.ஹரிபாபு ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்.10 வது மண்டலக் குழுத் தலைவர். எம்.கிருஷ்ணமூர்த்தி நாடாளுமன்ற தேர்தல் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதியில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் இந்தியா கூட்டணியின் வேட்பாளராக போட்டியிடும் முனைவர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து ஆற்ற வேண்டிய களப் பணிகள் குறித்தும் இல்லந்தோறும் சென்று வாக்காளர்களை காலை மாலை இருவேளையும் சந்தித்து இரண்டரை ஆண்டுகால தலைவர் தளபதி அவர்களின் சாதனைகளைக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குசேகரிக்க வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் சைதை.ஆர். ரமேஷ், மா.ஏழுமலை, சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன், வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன், ப.நரேஷ், ஜி.ஏழுமலை, கொடி. து.சுரேஷ்பாபு, டி.கோபால கிருஷ்ணன், எஸ் முகமது அலி, யமஹா.ராஜேஷ், சார்ப்.சரவணன், கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என். ரமேஷ், எஸ்.கண்ணன், ஆர்.பெருமாள், ஆர்.தாமோதரன், ப.சிவகுமார், எஸ். சையத்ஜலால், மு. காத்தவராயன், வி.வெங்கடே சன், துளசி சந்திரசேகர், ஆட்டோ. சேகர், வி.ஆதிகேசவன், த. சேகர், தோட்டம்.ஆர்.ஜவகர், ப.தினகரன், டைல்.ராதாகிருஷ்ணன், எஸ்.முருகன், ஆர்.கண்ணன், எம்.சுந்தரேசன், ஜோ.அந்தோணி, ஜெ.தமிழ்ச்செல்வன், டி.ஜானகிராமன், ப.மோகன் போட்டோ.ரவி, எஸ்.சந்தான கிருஷ்ணன், மோ.பிரபுராம் ஜி.சீனிவாசன், கே.வேலாயுதம், ஜெ. வெங்கடேஷ், தீ. உதயசூரியன், பச்சையப்பன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

### சென்னை கிழக்கு மாவட்டம், மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட

# துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம் பகுதிச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச்செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிகளின் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (25.03.24 திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7.செல்லப்பா தெரு என்ற விலாசத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மேற்கண்ட தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், ,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் தொகுதி பொறுப்பாளர்கள்,பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நாடாளுமன்ற தேர்தல்

**பி.கே.சேகர்பாபு**
அமைச்சர் - செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### வடசென்னை தொகுதி கழக வேட்பாளர்

# கலாநிதி வீராசாமி இன்று வேட்பு மனுத் தாக்கல்!



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியில் மீண்டும் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர். கலாநிதி வீராசாமி அவர்கள் இன்று (25.3.2024) காலை 11:30 மணியளவில் மண்டலம் 5, மாநகராட்சி அலுவலகத்தில் தமது வேட்பு மனுவை தாக்கல் செய்கிறார்.



நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தூத்துக்குடி தேரடி பகுதியில் I.N.D.I.A கூட்டணியின் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் 20.03.2024 அன்று மாலை நடைபெற்றது. தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான திருமதி. பி.கீதாஜீவன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி மாநகர மாவட்ட தலைவர் முரளிதரன், சமத்துவ மக்கள் கழக மாவட்ட செயலாளர் அற்புதராஜ், மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணை மேயர் திருமதி ஜெனிட்டா செல்வராஜ், தலைமைக் கழக பேச்சாளர் சரவெடி சரத் பாலா, மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் துறைமுகம் பிளாரன்ஸ், பொதுக்குழு உறுப்பினர் திருமதி. கஸ்தூரி தங்கம், மாநகராட்சி மண்டல தலைவர் நிர்மல்ராஜ், பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், ராமகிருஷ்ணன், சுரேஷ்குமார், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் அந்தோணி ஸ்டாலின், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ஜெயசீலி, திருமதி பவானி மார்ஷல், திருமதி.மெட்டில்டா, திருமதி, நாகேஸ்வரி, மாவட்ட மருத்துவ அணி தலைவர் அருண்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் வழக்கறிஞர் ஆ.மணியின் அறிமுகக் கூட்டம் தருமபுரி சட்டமன்றத் தொகுதி தருமபுரி கே.பி.ஜெ. திருமண மண்டபத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி மற்றும் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், கூட்டணிக் கட்சி மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக மாநில மாவட்ட, ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு தலைவர்கள், சார்பு அமைப்பு நிர்வாகிகள் கிளை கழக செயலாளர்கள், பி.எல்.ஏ.2, பி.எல்.சி. மற்றும் 3000க்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.